தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 3, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 ஆகஸ்ட் 19, வியாழக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு எனக் கூறப்படுபவைகளாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் பச்சைத் துண்டை கழுத்தில் அணிந்து வந்திருந்தனர்.)

TRUTH ALONE TRIUMPHS

1. 18-8-2021 அன்று அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து தாமாகவே வெளியேறிய நிலையில், பேரவைத் தலைவர் வெளியேற்றியதாக 19-8-2021 அன்று சில பத்திரிகைகள் தவறாக செய்தி வெளியிட்டமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியச் செய்தியை தங்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நேற்றையதினம் சபையில் ஒரு பெரும் பிரச்சினை ஏற்பட்டு, அதனுடைய முடிவு என்னவாயிற்று*

என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், சில பத்திரிகைகளில் இன்றைக்கு எப்படி செய்தி வந்திருக்கின்றது என்று கேட்டால், 'கொடநாடு விவகாரத்தில் தமிழக சட்டசபையில் கூச்சல்-குழப்பம்', 'அ.தி.மு.க. எம்.எல்.ஏ.-க்கள் வெளியேற்றம்' என்று வந்திருக்கின்றது. ஆனால், நடந்தது என்ன? அதே சில பத்திரிகைகளில் உள்ளடக்க செய்திகளில், 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசத் தொடங்கியதும், அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேறினர்' என்று இருக்கிறது. அவர்களாக வெளியேறிய ஒரு செய்தியை சில பத்திரிகைகள், தாங்கள் அவர்களை வெளியேற்றியதுபோல் செய்திகள் வெளியிட்டிருப்பது படிப்பவர்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இரண்டாவது, தலைவர் அவர்களுடைய செயலுக்கு ஒரு மாற்றுக் கருத்தை பரப்புவது நல்லதல்ல என்ற ஒரு காரணத்தினால், இத்தகைய செய்திகளை வெளியிடுகின்றபோது பத்திரிகைகள் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்ற அறிவுரையை தாங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவர்கள் மட்டுமல்ல, இந்த அவையின் கவனத்திற்கு. நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னிடத்தில் அனுமதியே பெறாமல் ஒரு பிரச்சினையை பேரவையில் எழுப்ப முயன்றார்கள். அப்போதே சொன்னேன் என்னுடைய அனுமதியைப் பெறவில்லை, தவறான நடைமுறை என்றும், கடந்த காலங்களில் இருந்த நடைமுறைகளையும் பார்த்தேன், அதுபோன்று அனுமதிக்கப்படவில்லை. இருப்பினும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையில் அமைச்சராக, முதலமைச்சராக இருந்தவர். நல்ல அனுபவம் வாய்ந்தவர். பேரவை விதிகள், நடைமுறைகள் தெரிந்தவர். இப்படிச் செய்கிறாரே என்று எண்ணி, எதிர்க்கட்சித் தலைவர் என்கிற காரணத்தினால் அவருக்கு வாய்ப்பினை வழங்கினேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜனநாயக முறையில் இந்தப் பேரவை நடைபெற வேண்டும் என்ற கொள்கை கொண்டவர். என்னுடைய அரசு அல்ல, எனது அரசு அல்ல, நமது அரசு (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் சேர்ந்து மக்களுக்கான திட்டங்களை வகுக்க வேண்டும், இந்தப் பேரவை ஆக்கப்பூர்வமாக,

2021 ஆகஸ்ட் 19] [பேரவைத் தலைவர்]

இழந்த பெருமை மீட்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள்.

மக்களுக்கான பிரச்சினைகளைப் பேசுவார் என நினைத்து நான் அனுமதித்தேன். ஆனால், அவர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை இந்த அவையில் எழுப்ப முற்பட்டார். தனிப்பட்ட பிரச்சினையை இந்த அவையில் எழுப்பக் கூடாது. இருப்பினும் அதையும் நான் அனுமதித்தேன். எழுந்து பேச முற்பட்ட சில மணித் துளிகளில் பின்னால் இருந்த உறுப்பினர்கள் அனைவரும் என்னுடைய அனுமதியைப் பெறாமல், ஏதோ ஒன்றை, எழுதிக்கொண்டுவந்த பதாகையை, அவையில் காண்பித்தனர். அவையில் காட்சிப் பொருளாக எதையும் காண்பிக்க வேண்டுமெனில் என்னுடைய அனுமதியை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் அனுமதி பெறவில்லை. நான் நேற்றைக்கு இங்கே குறிப்பிட்டதை மீண்டும் அப்படியே சொல்கிறேன்.

"என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் எதையும் காட்டக்கூடாது. நீங்கள் இந்த அவைக்குக் களங்கம் ஏற்படுத்துகின்றவண்ணம் முறைகேடாக பதாகைகளை உள்ளே கொண்டுவந்திருக்கின்றீர்கள். நீங்கள் என்னிடம் எந்த அனுமதியும் பெறவில்லை. அனுமதி பெறாமல் நீங்கள் இதையெல்லாம் பேசுவது தவறு. நீங்கள் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. என்னிடம் அனுமதி வாங்கவில்லை நீங்கள். சட்டப் பேரவைத் தலைவர் நான் நிற்கும்போது நீங்கள் அனைவரும் உட்கார வேண்டும். முதலில் உட்காருங்கள். நான் எழுந்தால் நீங்கள் அனைவரும் உட்கார வேண்டும்".

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். அப்போது இந்த அவையிலிருந்து அவர்களாகத்தான் வெளியேறினார்கள். நான் வெளியேற்றவில்லை. இனிவருங்காலங்களில் ஊடகங்கள் கவனத்துடன் செய்தியினை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.